## (உ) கிராமிய வங்கித்தொழிலும் கொடுகடனும்

கிராமிய பகுதிகளுக்கான நிறுவனக் கொடுகடன்கள் பிரதானமாக கிராமிய கூட்டுறவு வங்கிகள், புதிய வேளாண்மைக் கொடுகடன் திட்டம் என்பவற்றின் மூலமே வழங்கப்படுகின்றன. இதைவிட குறிப்பிட்ட சில நோக்கங்கட்காக அரசாங்கத்திணைக்களங்களினாலும், வர்த்தக வங்கிகளினாலும், சிறப்புக் கொடுகடன் நிறுவனங்களினாலும் கிராமியப் பகுதிகளுக்குக் கொடுகடன் வழங்கப்படுகின்றது.

### 1. கிராமியக் கூட்டுறவு வங்கிகள்

கிராமிய வங்கிகளின் எண்ணிக்கை காலாண்டு அடிப்படையில் அவற்றின் வைப்புக்கள், முற்பணங்கள் என்பவற்றை அட்டவணை 11(உ)1 காட்டுகின்றது. மீளத் திருத்தி அமைக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கிராமியக் கூட்டுறவு வங்கி அமைக்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் தீர்மானத்தைத் தொடர்ந்து, 1972 ஆம் ஆண்டில் கிராமிய வங்கிகளின் எண்ணிக்கை துரிதமாக விரிவடைந்தமை கவனிக்கற்பாலதாகும். ஆய்வுக்குரிய ஆண்டில் 131 புதிய கிராமிய வங்கிகள் நிறுவப்பட்டன. அவற்றில் 111 வங்கிகள் இந்த ஆண்டின் முதற்காலாண்டுப் பகுதியில் ஏற்படுத்தப்பட்டன. அடுத்த இரண்டு காலாண்டுப் பகுதிகளிலும் கிராமிய வங்கிகளினதும் விரிவாக்கம், இரும்புப் பெட்டிகள் கிடைப்பதில் ஏற்பட்ட தட்டுப்பாட்டின் காரணத்தால் குறைக்கப்பட்டது. 3ஆம் காலாண்டின் இறுதியில் கிராமிய வங்கிகளின் எண்ணிக்கை 242 ஆகக் காணப்பட்டது. வர்த்தக வங்கிகளின் வேலை நிறுத்தம் காரணமாக 4ஆம் காலாண்டுப் பகுதியில் ஒரு புதிய கிராமிய வங்கியும் நிறுவப்படவில்லை.

கிராமிய வங்கிகளில் இருந்த சேமிப்பு வைப்புக் கணக்குகள் 1971ஆம் ஆண்டின் இறுதியில் 60,371 ஆக இருந்து 1972இன் இறுதியில் 102,822 ஆக அதிகரித்தன. இவ்வதிகரிப்பு 70.3 சதவீதமாகும். எப்படியிருப்பினும் இக்கணக்குகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட கூரிய அதிகரிப்புக்கு இந்த ஆண்டுக் காலப்பகுதியில் கிராமிய வங்கிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட விரிவாக்கமே காரணமாகும். ஆகவே 1971ஆம் ஆண்டின் இறுதியில் இருந்த 111 வங்கிகளினதும் நிலையை வேறாகக் காட்டுவதே பொருத்தமுடையதாகும். இந்தப் 'பழைய'[1] வங்கிகளினது சேமிப்பு வைப்புக் கணக்குகள் முன்னைய ஆண்டினை விட 16,678 ஆல் அதிகரித்தன. 1972இல் தாபிக்கப்பட்ட 'புதிய' வங்கிகளின் சேமிப்பு வைப்புக் கணக்குகளின் எண்ணிக்கை 25,773 ஆகக் காணப்பட்டது. கிராமிய வங்கிகளின் சேமிப்புக்களின் தொகை 1971ஆம் ஆண்டில் காணப்பட்ட மட்டத்தை விட 1972ல் ரூ. 55 இலட்சத்தால் அதிகரித்துக் காணப்பட்டது. இந்த அதிகரிப்பில் ரூ. 38 இலட்சம் 1972 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட 'புதிய' கிராமிய வங்கிகளிலிடப்பட்ட வைப்புக்களாகும். இந்தஆண்டுக் காலப்பகுதியில் 'பழைய' வங்கிகளிலிடப்பட்டசேமிப்பு வைப்புக்

---

1. இனிமேல் 1971ஆம் ஆண்டில் இருந்த 111 கிராமிய வங்கிகளும் 'பழைய' வங்கிகள் எனவும் 1972ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட கிராமிய வங்கிகள் 'புதிய' வங்கிகள் எனவும் குறிப்பிடப்படும்.

## கிராமிய வங்கிகளின் வைப்புக்

| காலாண்டு முடிவு | | வங்கிகளின் எண்ணிக்கை | வைப்புக் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | சேமிப்பு | | | நிலையான | | |
| | | | எண் | தொகை | சராசரி | எண் | தொகை | சராசரி |
| 1965 | மாச்சு ... | 6 | 1556 | 194,013 | 125 | 10 | 8,100 | 810 |
| | யூன் ... | 7 | 1925 | 305,250 | 159 | 7 | 3,682 | 526 |
| | செத்தெம்பர் ... | 8 | 2597 | 504,160 | 194 | 7 | 3,734 | 533 |
| | திசெம்பர் ... | 8 | 2924 | 491,626 | 168 | 9 | 4,734 | 526 |
| 1966 | மாச்சு ... | 8 | 3244 | 499,462 | 154 | 9 | 8,732 | 970 |
| | யூன் ... | 8 | 3519 | 525,370 | 149 | 13 | 20,586 | 1583 |
| | செத்தெம்பர் ... | 11 | 3923 | 604,505 | 154 | 11 | 19,868 | 1806 |
| | திசெம்பர் ... | 13 | 4636 | 703,011 | 152 | 15 | 22,737 | 1516 |
| 1967 | மாச்சு ... | 14 | 5150 | 707,475 | 137 | 16 | 21,587 | 1349 |
| | யூன் ... | 16 | 5971 | 821,448 | 138 | 20 | 38,952 | 1948 |
| | செத்தெம்பர் ... | 20 | 6968 | 1,038,201 | 149 | 28 | 40,242 | 1437 |
| | திசெம்பர் ... | 27 | 8792 | 1.305,846 | 118 | 41 | 65,381 | 1595 |
| 1968 | மாச்சு ... | 30 | 10378 | 1,650,228 | 159 | 85 | 111,430 | 1310 |
| | யூன் ... | 34 | 12137 | 2,063,947 | 170 | 137 | 161,486 | 1179 |
| | செத்தெம்பர் ... | 39 | 14689 | 2,643,592 | 180 | 254 | 221,270 | 871 |
| | திசெம்பர் ... | 44 | 17359 | 3,110,576 | 179 | 287 | 222,614 | 776 |
| 1969 | மாச்சு ... | 54 | 19763 | 3,624,967 | 183 | 621 | 267,109 | 430 |
| | யூன் ... | 57 | 22314 | 4,406,770 | 197 | 575 | 383,550 | 667 |
| | செத்தெம்பர் .. | 64 | 25598 | 4,930.514 | 193 | 687 | 437,884 | 637 |
| | திசெம்பர் ... | 68 | 28626 | 5,712,893 | 199 | 724 | 460,168 | 636 |
| 1970 | மாச்சு ... | 80 | 31663 | 6,209,882 | 196 | 420 | 521,345 | 1241 |
| | யூன் ... | 86 | 34887 | 7,104,222 | 176 | 841 | 697,101 | 829 |
| | செத்தெம்பர் ... | 89 | 38417 | 8,255,943 | 215 | 932 | 721.352 | 774 |
| | திசெம்பர் ... | 90 | 49939 | 16,109,287 | 322 | 892 | 799,117 | 896 |
| 1971 | மாச்சு ... | 90 | 52273 | 14,780,578 | 283 | 911 | 826,532 | 907 |
| | யூன் ... | 90 | 53765 | 15,509,220 | 288 | 835 | 806,178 | 965 |
| | செத்தெம்பர் ... | 91 | 56694 | 16,380,194 | 289 | 809 | 723,171 | 894 |
| | திசெம்பர் ... | 111 | 60371 | 17,188,297 | 285 | 838 | 676,106 | 807 |
| 1972 | மாச்சு ... | 222 | 75991 | 17,973,907 | 236 | 796 | 640,560 | 808 |
| | யூன் ... | 235 | 88066 | 20,584,908 | 234 | 800 | 657,614 | 822 |
| | செத்தெம்பர் ... | 242 | 96525 | 21,927,687 | 227 | 875 | 650,798 | 744 |
| | திசெம்பர் ... | 242 | 102822 | 22,703,436 | 221 | 812 | 617,150 | 760 |

## களும், முற்பணங்களும் 1965—72

தொகை ரூபாய்களில்

| கணக்குகள் | | | முற்பணங்கள் | | | | | | | | | மொத்த வைப்புக்களுக்கும், மொத்த முற்பணங்களுக்கும் இடையிலான வித்தியாசம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்தம் | | | குறுங்காலக் கடன்கள் | | | அடகு வைத்தல் | | | மொத்தம் | | | |
| எண் | தொகை | சராசரி | எண் | தொகை | சராசரி | எண் | தொகை | சராசரி | எண் | தொகை | சராசரி | |
| 1566 | 202,113 | 129 | 572 | 489,485 | 856 | வி.கி. | 97,413 | — | — | 586,898 | — | — 384,785 |
| 1932 | 308,932 | 160 | 771 | 693,621 | 900 | வி.கி. | 135,241 | — | — | 828,862 | — | — 519,930 |
| 2604 | 507,894 | 195 | 1038 | 855,946 | 825 | வி.கி. | 201,654 | — | — | 1,057,600 | — | — 549,706 |
| 2933 | 496,360 | 169 | 1153 | 914,699 | 793 | வி.கி. | 252,596 | — | — | 1,167,295 | — | — 670,935 |
| 3253 | 508,195 | 156 | 1316 | 1,010,628 | 768 | வி.கி. | 327,737 | — | — | 1,338,365 | — | — 830,170 |
| 3532 | 545,956 | 155 | 1433 | 1,072,293 | 748 | வி.கி. | 356,383 | — | — | 1,428,676 | — | — 882,720 |
| 3924 | 624,373 | 159 | 1611 | 1,204,125 | 747 | 3659 | 390,077 | 107 | 5270 | 1'594,202 | 302 | — 969,829 |
| 4651 | 725,748 | 156 | 1783 | 1,326,457 | 744 | 4222 | 427,129 | 101 | 6005 | 1,753,586 | 292 | — 1,027,838 |
| 5166 | 729,062 | 141 | 2037 | 1,413,639 | 694 | 4943 | 493,707 | 100 | 6980 | 1,907,346 | 273 | — 1,178,284 |
| 5991 | 860,400 | 144 | 2173 | 1,560,560 | 718 | 5348 | 532,410 | 100 | 7521 | 2,092,970 | 278 | — 1,232,570 |
| 6996 | 1,078,433 | 154 | 2529 | 1,815,637 | 718 | 6094 | 591,527 | 97 | 8623 | 2,407,164 | 279 | — 1,328,731 |
| 8833 | 1,371,227 | 155 | 2897 | 2,029,476 | 701 | 6598 | 633,213 | 96 | 9495 | 2,662,689 | 280 | — 1,291,462 |
| 10463 | 1 761,658 | 168 | 3336 | 2,366,359 | 709 | 7458 | 736,421 | 99 | 10794 | 3,102,780 | 287 | — 1,341,122 |
| 12274 | 2,225,433 | 181 | 4128 | 2,592,847 | 628 | 7571 | 766,498 | 101 | 11699 | 3,359,345 | 287 | — 1,133,912 |
| 14943 | 2,864,862 | 192 | 4713 | 3,105,393 | 659 | 8629 | 841,780 | 98 | 13342 | 3,947,173 | 296 | — 1,082,311 |
| 17646 | 3,333,190 | 189 | 5586 | 3,630,731 | 650 | 9507 | 1,085,613 | 114 | 15093 | 4,716,344 | 312 | — 1,383,154 |
| 20384 | 3,892,072 | 191 | 6109 | 4,161,873 | 681 | 10869 | 1,134,434 | 104 | 16978 | 5,296,307 | 312 | — 1,404,235 |
| 22889 | 4,790,320 | 209 | 6770 | 4,397,882 | 669 | 10844 | 1,196,139 | 110 | 17614 | 5,594,021 | 318 | — 803,701 |
| 26285 | 5,368,398 | 204 | 7379 | 4,969,245 | 673 | 12462 | 1,424,498 | 114 | 19841 | 6,393,743 | 322 | — 1,025,345 |
| 29350 | 6,173,061 | 210 | 7893 | 5,572,281 | 706 | 14325 | 1,523,646 | 106 | 22218 | 7,095,927 | 319 | — 922,866 |
| 32083 | 6,731,227 | 209 | 8506 | 6,049,587 | 711 | 16345 | 1,807,274 | 111 | 24851 | 7,856,861 | 316 | — 1,125,634 |
| 35728 | 7,801,323 | 212 | 8894 | 6,265,170 | 705 | 16587 | 1,820,629 | 110 | 25481 | 8,085,799 | 317 | — 284,476 |
| 39349 | 8,977,295 | 220 | 9671 | 6,779,046 | 701 | 17842 | 1,945,017 | 109 | 27513 | 8,724,063 | 317 | + 253,232 |
| 50831 | 16,908,405 | 333 | 10017 | 7,122,213 | 711 | 18092 | 1,980,066 | 109 | 28109 | 9,102,279 | 324 | + 7,806,126 |
| 53184 | 15,607,110 | 293 | 10627 | 7,505,111 | 706 | 20880 | 2,222,506 | 106 | 31507 | 9,727,617 | 309 | + 5,879,493 |
| 54600 | 16,315,398 | 299 | 10405 | 7,232,584 | 695 | 18517 | 1,939,600 | 105 | 28922 | 9,172,184 | 317 | + 7,143,214 |
| 57503 | 17,103,365 | 297 | 10929 | 7,410,959 | 678 | 20293 | 2,063,927 | 102 | 31222 | 9,474,886 | 303 | + 7,628,479 |
| 61209 | 17,864,403 | 292 | 10725 | 7,144,913 | 666 | 21044 | 2,171,734 | 103 | 31769 | 9,316,647 | 293 | + 8,547,756 |
| 76787 | 18,614,467 | 242 | 11009 | 7,136,622 | 648 | 30106 | 3,129,497 | 104 | 41115 | 10,266,119 | 250 | + 8,348,348 |
| 88866 | 21,242,522 | 239 | 11212 | 7,328,506 | 654 | 37899 | 4,126,482 | 109 | 49111 | 11,454,988 | 233 | + 9,787,534 |
| 97400 | 22,578,485 | 232 | 11447 | 8,023,384 | 701 | 52728 | 5,762,400 | 109 | 64175 | 13,785,784 | 215 | + 8,792,701 |
| 103634 | 23,320,586 | 225 | 11515 | 8,226,663 | 714 | 60735 | 6,958,250 | 115 | 72250 | 15,184,913 | 210 | + 8,135,673 |

மூலம்: கிராமிய கொடுகடன் திணைக்களம், மக்கள் வங்கி.

கள் ரூ. 17 இலட்சம் அல்லது 9.9 சதவீதங் கொண்ட ஓரளவு அதிகரிப்பினையே பதிவு செய்தன. சேமிப்பு வைப்புக்களின் சராசரி அளவு 1971ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூ. 285ல் இருந்து, 1972ஆம் ஆண்டின் முதல் காலாண்டுப் பகுதியின் இறுதியில் ரூ. 236 ஆக வீழ்ச்சியடைந்தது. இந்நிலை 1970ஆம் ஆண்டின் மூன்றும் காலாண்டுப் பகுதியில் ஆரம்பித்து இந்த ஆண்டில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து ரூ. 221 கொண்ட புதிய கீழ் மட்டத்தை அடையும்வரை நீடித்துக் காணப்பட்டது.

கிராமிய வங்கிகளின் நிலையான வைப்புக் கணக்குகளின் எண்ணிக்கை 1971 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட 838 இல் இருந்து 1972ஆம் ஆண்டு இறுதியில் 812க்கு வீழ்ச்சியடைந்தது. 1972ஆம் ஆண்டின் இறுதியில் 'பழைய' வங்கிகளின் நிலையான வைப்புக்களின் எண்ணிக்கை 760 ஆகக் காணப்பட்டவிடத்து, 'புதிய' வங்கிகளின் கணக்குகளின் தொகை 52ஆகக் காணப்பட்டது. 1971ஆம் ஆண்டில் நிலையான வைப்புக்களின் தொகையில் காணப்பட்ட இந்த வீழ்ச்சிப்போக்கு 1972ஆம் ஆண்டின் 1ம் காலாண்டின் இறுதி வரைதொடர்ந்தது. ஆண்டின் 2ம் காலாண்டுப் பகுதியில் ஏற்பட்ட சிறிதளவு அபிவிருத்தியைத் தவிர 1972ஆம் ஆண்டின் இறுதியில் நிலையான வைப்புக்களின் அளவு குறைந்த மட்டமாகிய ரூ. 617,150 ஆக விளங்கியது. 'புதிய' வங்கிகளின் நிலையான வைப்புத்தொகை ரூ. 58,805 ஆக மட்டுமே விளங்கியவிடத்து, 'பழைய' வங்கிகளின் நிலையான வைப்புத் தொகை ரூ. 558,345 ஆக விளங்கியது. 'பழைய' வங்கிகளில் இருந்த தொகை 1971ஆம் ஆண்டின் இறுதியில் இருந்ததைவிட 17.4 சதவீதம் குறைவாகக் காணப் பட்டது. நிலையான வைப்புக்களின் சராசரி அளவும் 1971ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூ. 807ல் இருந்து 1972ஆம் ஆண்டு இறுதியில் ரூ. 760 ஆக வீழ்ச்சியடைந்தது. நிலையான வைப்புக்களின் இந்தப் பின் தங்கிய நிலை, பணத்தை நீண்ட காலத்துக்கு (3 மாதம் தொட்டு 12 மாதம் வரை) கிராமிய வங்கிகளில் சேமித்துவைக்கும் பழக்கம் இன்னும் கிராமியப் பகுதிகளில் பிரபலமடையவில்லையென்பதை எடுத்துக் காட்டுவதாகக் கருதலாம்.

கிராமிய வங்கிகளினது மொத்த வைப்புக்கள் 1972ஆம் ஆண்டில் மேல் நோக்கிய போக்கினைக் காட்டியது. 1971ஆம் ஆண்டின் இறுதியில் ரூ. 179 இலட்சமாக இருந்த மொத்த வைப்புத் தொகை 1972ஆம் ஆண்டில் ரூ. 54 இலட்சத்தால் அல்லது 30.2 சதவீதத்தால் அதிகரித்தது. 1972ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த வைப்புக்களில் ரூ. 38 இலட்சத்தினை வைத்திருந்த 'புதிய' வங்கிகளே பெருமளவுக்கு இந்த அதிகரிப்புக்குப் பொறுப்பாக இருந்தன. இவ்வாருக 'பழைய' வங்கிகள் தங்கள் மொத்த வைப்புக்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைப் பதிவு செய்யவில்லை.

1972ஆம் ஆண்டின் முதற் காலாண்டுப்பகுதியில் சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவு செய்த கிராமிய வங்கிகளின் குறுகிய காலக் கடன்களாக வழங்கப்பட்ட கொடுகடன்களின் அளவு, அடுத்த ஒன்பது மாதக் காலப்பகுதியில் ஓரளவு அதிகரிப்பினைக் காட்டியது. 1972ஆம் ஆண்டின் இறுதியில் கொடுகடன் நடவடிக்கைகளின் எண்ணிக்கை 11,515 ஆக அமைந்து, 1971ஆம் ஆண்டு

இறுதியிலிருந்த நடவடிக்கைகளின் எண்ணிக்கையை விட 790 கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. 1972ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 131 புதிய வங்கிகள் ஆண்டு முடிவில் ஆக 100 கொடுகடன் நடவடிக்கைகளை மட்டுமே செய்திருந்தன என்பது கவனிக்கத்தக்கதொரு விடயமாகும். 1972ஆம் ஆண்டு இறுதியில் குறுகியகாலக் கொடுகடன்களின் சராசரி அளவு ரூ. 714 ஆகக் காணப்பட்டது. இது 1971 ஆம் ஆண்டு இறுதியில் காணப்பட்ட அளவினை விட சற்று அதிகமானதாகும். எப்படியிருப்பினும் ஆய்வுக்குரிய ஆண்டிறுதியில் காணப்பட்ட சராசரி, கிராமிய வங்கித்திட்டம் ஆரம்பிக்கப் பட்ட ஒரு வருடத்திற்குப் பின்னர் அதாவது 1965 ஆம் ஆண்டில் காணப்பட்ட மட்டத்தினை விட மிகக் குறைவாகவே காணப்பட்டது. வெளிநின்ற கடன்களின் அளவு 1971ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூ. 71 இலட்சத்திலிருந்து 1972ஆம் ஆண்டின் இறுதியில் ரூ. 82 இலட்சமாக அதிகரித்தது. ஆண்டிறுதியில் 131 'புதிய' வங்கிகளினதும் வெளிநின்ற கடன்களின் அளவு ரூ. 49,791 ஆக மட்டுமே காணப்பட்டது. 1972ஆம் ஆண்டிறுதியில் எல்லாக் கிராமிய வங்கிகளினதும் மொத்த வைப்புக்கள் அவற்றின் வெளிநின்ற குறுகியகால கொடுகடன்களின் அளவினை விட ரூ. 151 இலட்சம் அதிகமாகக் காணப்பட்டது. 1972ஆம் ஆண்டிறுதியில் 235 கிராமிய வங்கிகளில் இருந்த வைப்புக்களின் தொகை வெளிநின்ற குறுகிய காலக் கொடுகடன்களின் அளவினை விடக் கூடுதலாகக் காணப்பட்டது.

கிராமிய வங்கிகளின் நோக்கங்களின்படியாக பகுக்கப்பட்டு வழங்கப்பட்ட கடன்களைக் காட்டும் அட்டவணை 11 (உ) 2, உற்பத்திக்கான கடன்கள்

**அட்டவணை II (உ) 2**

**நோக்கங்களின்படியான கிராமிய வங்கிக் கடன்கள்**

(ஒவ்வோர் ஆண்டிலும் திசெம்பர் 31ஆந் திகதியிலுள்ளவாறு)

| நோக்கம் | தொகை ரூபாய்களில் | | | | மொத்தத்தின் சதவீதம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1971 | | 1972 | | 1971 | | 1972 | |
| உற்பத்தி — இவற்றில் ... | | 1,515,326 | | 1,246,159 | | 21.2 | | 15.2 |
| வேளாண்மை ... | 1,340,908 | | 1,035,266 | | 18.8 | | 12.6 | |
| கால்நடை வளர்ப்பு ... | 58,978 | | 130,177 | | 0.8 | | 1.6 | |
| குடிசைக் கைத்தொழில்... | 115,440 | | 80,716 | | 1.6 | | 1.0 | |
| வீடமைப்பு ... | | 2,583,646 | | 2,616,245 | | 36.2 | | 31.8 |
| கடன் மீட்சி ... | | 1,851,465 | | 3,467,067 | | 25.9 | | 42.1 |
| வர்த்தகம் ... | | 401,062 | | 450,795 | | 5.6 | | 5.5 |
| நுகர்வு ... | | 97,172 | | 90,808 | | 1.4 | | 1.1 |
| மின்சார வசதி ... | | 6.495 | | 6,351 | | 0.1 | | .1 |
| ஏனையவை ... | | 689,745 | | 349,238 | | 9,6 | | 4.2 |
| மொத்தம் | | 7,144,911 | | 8,226,663 | | 100.0 | | 100.0 |

மூலம்: கிராமிய கொடுகடன் திணைக்களம், மக்கள் வங்கி.

1972ஆம் ஆண்டில் ரூ. 2.6 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்திருப்பதைக் காட்டுகின்றது. 1972ஆம் ஆண்டில் வேளாண்மை உற்பத்திக் குடிசைக் கைத்தொழில் என்பவற்றுக்காக வழங்கப்பட்ட கடன்கள் வீழ்ச்சியைப் பதிவு செய்த போதும் கால் நடை வளர்ப்புக்கு வழங்கப்பட்ட கடன்கள் குறிப்பிடத்தக்க அளவு அதிகரிப்பைக் காட்டுகின்றன. இந்நோக்கத்துக்காக வழங்கப்பட்ட கடன்களின் தொகை 1971ஆம் ஆண்டில் ரூ. 58,978 ஆகவிருந்து 1972ஆம் ஆண்டில் ரூ. 130,177 ஆக அதிகரித்தது. இது 121 சதவீதம் கொண்ட அதிகரிப்பாகும். 1971ஆம் ஆண்டிற் காணப்பட்ட நிலைமைக்கு மாறுபாடாக படுகடன் மீட்புக்காக ஒதுக்கப்பட்ட கொர்டுகடனும் 87.3 சதவீதத்தால் 1972ல் அதிகரித்துக் காணப்பட்டது. ஏனைய நோக்கங்கட்காக வழங்கப்பட்டகடன்கள், 1971ஆம் ஆண்டிற் காணப்பட்ட மட்டங்களைவிடக் குறிப்பிடத்தக்க அளவு மாற்றங்களைப் பதிவு செய்யவில்லை. நோக்கங்களின் அடிப்படையில் கிராமிய வங்கிகளால் கடன்கள் வழங்கும் முறை முன்னைய ஆண்டுகள் போலவே பெருமளவுக்குக் காணப்பட்டது.

**மாவட்ட அடிப்படையிலான பகுப்பாய்வு**

கிராமிய வங்கிகளினது வைப்புக்களும், முற்பணங்களும் பின்னிணைப்பு 11 அட்டவணை 63ல் மாவட்ட அடிப்படையில் வகைப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டமே தொடர்ந்தும் கூடிய அளவு கிராமிய வங்கிகளைக் கொண்டதாகக் காணப்பட்டது; இதனைத் தொடர்ந்து குருநாகல், காலி களுத்துறை, கண்டி மாவட்டங்கள் விளங்கின. 1972 ஆம் ஆண்டு இறுதியிற் கொழும்பு மாவட்டத்தின் மொத்த வைப்புக்களின் தொகை ரூ. 59 இலட்சமாகக் காணப்பட்டது. இது எல்லாக் கிராமிய வங்கிகளினதும் மொத்த வைப்புக்களினதும் 25·5 சதவீதமாகும். இதே சமயம் மொத்த வைப்புக்களின் குருநாகல் மாவட்டம் ரூ. 29 இலட்சத்தை அல்லது 12·4 சதவீதத்தைக் கொண்டிருந்தது. கடன் நடவடிக்கைகளைப் பொறுத்தவரையிற் கூட 1972 ஆம் ஆண்டு இறுதியில் வெளிநின்ற குறுந்தவணைக் கடன்களின் பெரும் தொகையினை கொழும்பு மாவட்டமே கொண்டிருந்தது. இது மொத்த வெளிநின்ற கடன்களின் ரூ. 21 இலட்சம் அல்லது 25·6 சதவீதமாகும். எல்லா மாவட்டங்களினதும் மொத்த வைப்புக்கள் குறுகிய காலக் கடன்களின் அளவைவிட அதிகமாகக் காணப்பட்டது.

கிராமிய வங்கிகள் மக்கள் வங்கியின் அடகுபிடிக்கும் முகவர்களாகவும் விளங்கின. அட்டவணை 11(உ) 1 இல் காட்டப்பட்டுள்ளபடி கிராமியப் பகுதிகளில் பெறுமதியுள்ள நகைகளைக் கொடுத்து கடன்பெறும் வழக்கம் அதிகரித்துள்ளமையை அடகு வைத்தல் நடவடிக்கைகளின் எண்ணிக்கை 1971 ஆம் ஆண்டின் இறுதியில் 21,044 ஆக இருந்து 1972 ஆம் ஆண்டின் இறுதியில் 60,735 ஆக அதிகரித்துள்ளமை புலப்படுத்துகின்றது. 100 குறுகியகாலக் கடன் நடவடிக்கைகளை மட்டும் கொண்ட 131 புதிய வங்கிகள் 21,058 அடகு வைத்தல் நடவடிக்கைகளைச் செய்திருந்தமை கவனிக்கற்பாலதாகும். அடகு வைத்தல் நடவடிக்கையின்மூலம் நடைபெற்ற

பணக் கொடுப்பனவு அளவு 1971 ஆம் ஆண்டின் இறுதியில் ரூ. 2,171,734 ஆக இருந்து 1972 ஆம் ஆண்டு இறுதியில் ரூ. 6,958,250 ஆக பெருமளவுக்கு அதிகரித்துக் காணப்பட்டது. இது 220 சதவீதம் கொண்ட அதிகரிப்பு ஆகும். 1972 ஆம் ஆண்டின் இறுதியில் 'பழைய' வங்கிகள் ரூ. 4,497,553 முதலீடு செய்தவிடத்தில் புதிய ஙெகிகள் முதலீடு செய்த தொகை ரூ. 2 460,697 ஆகக் காணப்பட்டது. அடகு பிடித்தல் திட்டத்தின்கீழ் கூடிய அளவு கடன்பாடு நடைபெறுவதற்கு இக்கடனைப் பெறுவதில் உள்ள குறைந்த அளவு சிக்கல்கள், நடைமுறைகள், கட்டுப்பாடுகள் என்பவை காரணமாக இருக்கலாம்

2. புதிய வேளாண்மைக் கொடுகடன் திட்டம்

(அ) நெற்கடன்.

அட்டவணை 11 (உ) 3ல் வழங்கப்பட்ட கடன்களின் தொகை, திரும்பப் பெறப்பட்ட தொகை, பெற்ற முறை, பயிர்ச்செய்கை தவறியமையினால் நீடிக் கப்பட்ட கடன்களின் தொகை, மீளச்செலுத்தத் தவறிய அளவு என்பவை சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

1971/72 ஆம் ஆண்டுப் பெரும்போக காலத்தில் பாவிக்கப்பட்ட கொடு கடனின் தொகை ரூ. 214 இலட்சமாக அமைந்து, முந்திய பெரும்போக காலத்தின்போது பாவிக்கப்பட்ட கொடுகடன் தொகையான ரூ. 236 இலட் சத்திலிருந்தும் ரூ. 22 இலட்சம் அல்லது 9·3 சதவீதம் கொண்ட வீழ்ச்சி யைப் பதிவு செய்து காணப்பட்டது. 1972 ஆம் ஆண்டின் சிறுபோக காலத்தில் பயன்படுத்தப்பட்ட கொடுகடனின் தொகை ரூ. 63 இலட்சமாக அமைந்து முன்னைய சிறுபோகத்தில் பயன்படுத்தப்பட்ட தெகையிலும் பார்க்க சிறிய ளவு அதிகரித்திருந்தது. இத்திட்டம் நடைமுறைக்குக்கொண்டுவரப்பட்ட கால மாகிய 1967/68 பெரும் போகம், 1968 சிறுபோகம் ஆகிய காலத்தில் பாவிக் கப்பட்ட கொடுகடன் மட்டம் முறையே ரூ. 614 இலட்சம் ரூ. 113 இலட்சங் களாக்ககாணப்பட்டு, 1971/72 பெரும்போகம் 1972 சிறுபோகம் என்பவற்றில் முறையே ரூ. 214 இலட்சம், ரூ 63 இலட்சமாக வீழ்ச்சியடைந்துகாணப்பட்டது. இக்கடன் வசதிகளைப் பயன்படுத்துவோர் தொகையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குச் காரணம், பெருமளவானோர் கடனை மீளக் கொடுக்காமல் தவறியமையே எனக் கருதப்படுகின்றது. காரணம் மீளச்செலுத்தத் தவறியோர் இத்திட்டத்தின் கீழ் மீண்டும் கடன் பெறுதற்குத் தகுதியற்றோரெனக் கருதப்பட்டமையேயாகும்.

மீளக் கொடுத்தல் சம்பந்தமாகக் கவனிக்குமிடத்து 1970/71 ஆம் ஆண் டின் பெரும்போக காலத்தின் 48·7 சதவீதத்துடனும் 1969/70 பெரும்போக காலத்தின் 50.0 சதவீதத்துடனும் ஒப்பிடுமிடத்து 1971/72 பெரும்போக காலத்தில் 45·7 சதவீதக் கடன்கள் மீளக்கொடுக்கப்பட் டிருந்தன. 1967/68, 1968/69 ஆம் ஆண்டுகளின் பெரும்போக காலங்களில் மீளப்பெறப்பட்ட வீதங்களான முறையே 85·5, 60·7 என்பவற்றைவிட இவ்வீதங்கள் மிகக் குறைவானவையாகும். 1970 பெரும்போகத்தில் மீளக் கொடுக்கப்பட்ட 67·5 சதவீதத்துடனும் 1971 பெரும்போக காலத்தில் மீளக்

## அட்டவணை II (உ) 3

## புதிய வேளாண்மைக் கொடுகடன் திட்டம் - நெற்கடன்கள்

தொகை 10 இலட்சம் ரூபாய்களில்

| விடயம் | பெரும் போகம் 67/68 | சிறு போகம் 1968 | பெரும் போகம் 68/69 | சிறு போகம் 1969 | பெரும் போகம் 69/70 | சிறு போகம் 1970 | பெரும் போகம் 70/71 | சிறு போகம் 1971 | பெரும் போகம் 71/72 | சிறு போகம் 1972 | பெரும் போகம் 72/73 (அ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வழங்கப்பட்ட கடன்கள் ... | 61.4 | 11.3 | 45.8 | 9.9 | 39.4 | 12.3 | 23.6 | 5.8 | 21.4 | 6.3 | 11.6 |
| மொத்த மீளக்கொடுப்பனவுகள், அவற்றில் ... | 52.5 | 9.6 | 27.8 | 8.0 | 19.7 | 8.3 | 11.5 | 4.6 | 9.8 | 1.9 | 0.6 |
| (அ) தன்விருப்பில் ... | 43.1 | 9.1 | 25.6 | 7.7 | 19.7 | 7.7 | 11.5 | 4.6 | 9.8 | 1.9 | 0.6 |
| (ஆ) அரிசிப்பங்கீடு ... | 9.4 | 0.5 | 2.2 | 0.3 | — | 0.6 | — | — | — | — | — |
| பயிர் விளையாமையால் நீடிக்கப்பட்டவை ... | 0.2 | — | 2.5 | 0.1 | 0.5 | — | — | — | — | — | — |
| வரத்தவறியது அல்லாத வரவேண்டியது ... | — | — | — | — | — | — | 0.2 | 0.1 | 4.9 | 4.0 | 11.0 |
| வரத்தவறியது ... | 8.7 | 1.7 | 15.5 | 1.8 | 19.2 | 4.0 | 11.9 | 1.1 | 6.7 | 0.4 | — |

வழங்கப்பட்ட தொகையின் சதவீதமாக

| விடயம் | பெரும் போகம் 67/68 | சிறு போகம் 1968 | பெரும் போகம் 68/69 | சிறு போகம் 1969 | பெரும் போகம் 69/70 | சிறு போகம் 1970 | பெரும் போகம் 70/71 | சிறு போகம் 1971 | பெரும் போகம் 71/72 | சிறு போகம் 1972 | பெரும் போகம் 72/73 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வழங்கப்பட்ட கடன்கள் ... | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |
| மொத்த மீளக்கொடுப்பனவுகள், அவற்றில் ... | 85.5 | 85.0 | 60.7 | 80.8 | 50.0 | 67.5 | 48.7 | 79.3 | 45.7 | 30.2 | 5.2 |
| (அ) தன்விருப்பில் ... | 70.2 | 80.5 | 55.9 | 77.8 | 50.0 | 62.6 | 48.7 | 79.3 | 45.7 | 30.2 | 5.2 |
| (ஆ) அரிசிப்பங்கீடு ... | 15.3 | 4.5 | 4.8 | 3.0 | — | 4.9 | — | — | — | — | — |
| பயிர் விளையாமையால் நீடிக்கப்பட்டவை ... | .3 | — | 5.5 | 1.0 | 1.3 | — | — | — | — | — | — |
| வரத்தவறியது அல்லாத வரவேண்டியது ... | — | — | — | — | — | — | .9 | 1.7 | 22.9 | 63.5 | 94.8 |
| வரத்தவறியது ... | 14.0 | 15.0 | 33.8 | 18.2 | 48.7 | 32.5 | 50.4 | 19.0 | 31.4 | 6.3 | |

(அ முற்றுப் பெறுத தரவுகள்.

மூலம்: கிராமியக் கொடுகடன் திணைக்களம், மக்கள் வங்கி.

கொடுக்கப்பட்ட 79.3 சதவீதத்துடனும் ஒப்பிடுமிடத்து 1972 பெரும்போக காலத்தில் பாவிக்கப்பட்ட கடனில் 30 2 சதவீதம் மட்டும் மீளக் கொடுக்கப்பட்டது. 1968ஆம் 1969ஆம் ஆண்டுகளின் பெரும்போக கால மீளப்பெறப்பட்ட மட்டங்களான முறையே 85·0, 80·8 சதவீதங்கள் பிந்திய பெரும்போக காலங்களுடன் ஒப்பிடுமிடத்து மிகவும் உயர்ந்தவையாகவே காணப்பட்டன. இக்காலப்பகுதியில் மீளப்பெறப்பட்ட தொகையின் உயர்ந்த மட்டத்துக்கு கடன்பெற்ற குடியிருப்பாளர்களிடமிருந்து பங்கீட்டு அரிசிப்புத்தகங்களைத் திருப்பிப்பெறுதல் மூலம் பெறப்பட்ட மீளக்கொடுப்பனவுகள் குறிப்பிடத்தக்க அளவுக்குக் காரணமாக இருந்தனவெனலாம்.

எப்படியிருப்பினும் கடன் பாவனையின் வீழ்ச்சிப் போக்கு, குறைந்த மட்ட மீளக்கொடுப்பனவுடன் சேர்ந்து காணப்பட்டமை தெளிவானதாகும். பணங்கொடுக்கத் தவறியோர் வீதம் தொடர்ந்தும் அதிகரித்துச் சென்றது. 1967/68ஆம் ஆண்டு பெரும்போக காலத்தில் 14.0 சதவீதமாக மட்டும் இருந்த இவ்வீதம் 1970/71 பெரும்போக காலத்தில் 50.4 சதவீதமாக அதிகரித்துக் காணப்பட்டது. இந்த வீதம் 1969/70 பெரும்போக காலத்தில் 48.7 சதவீதமாக விளங்கியது.

**மாவட்ட அடிப்படையிலான பகுப்பாய்வு**

1971/72ஆம் ஆண்டின் பெரும்போக காலத்தில் கடன் பாவனை மட்டங்கள் காலி, மன்னார், வவுனியா, அம்பாறை, குருநாகல், நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் வீழ்ச்சியடைந்தன. 1972 சிறுபோக காலத்தில் கடன் பாவனையில் அதிகரிப்புக்கள், மாத்தறை, அம்பாறை, குருநாகல், காலி, மட்டக்களப்பு, திருகோணமலை, மொனராகலை, கேகாலை மாவட்டங்களில் காணப்பட்டவிடத்து ஏனைய மாவட்டங்கள் முன்னைய சிறுபோக காலத்திற் பாவித்ததைவிட குறைந்த அளவு தொகைகளையே பாவித்தன. 1971/72 ஆம் ஆண்டின் பெரும்போக காலத்தில் மீளப் பெறப்பட்ட தொகையின் கூடிய மட்டங்களாக 82.5, 81.0, 80.8, 78.3, 73.3 சதவீதங்கள் முறையே பதுளை, பொலநறுவை, கேகாலை, காலி, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டவிடத்து ஆகக் குறைந்த மீளப் பெறப்பட்ட மட்டங்களாக 2.1, 16.7, 19.4, 20.7 சதவீதங்கள் முறையே யாழ்ப்பாணம், நுவரெலியா, புத்தளம், வவுனியா ஆகிய மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டன. 1971/72 பெரும்போக காலம் 1972 சிறுபோக காலங்களின் நெற்கடன்கள் சம்பந்தமான கடன்பாவனைகளும், மீளப் பெறப்பட்ட மட்டங்களும் பின்னிணைப்பு 11இன் அட்டவணை 64இல் தரப்பட்டுள்ளன. 1972 சிறுபோக காலத்திற்குரிய, அட்டவணையில் காட்டப்பட்டபடியான மீளக்கொடுப்பனவுத் தொகையினை முடிவாகக் கொள்ள முடியாது. ஏனெனில் இக்கடன்களை மீளக் கொடுக்கவேண்டிய காலம் இன்னும் முடிவுபெறுமையேயாகும்.

**(ஆ) உப உணவுப் பயிர்களுக்கான கடன்கள்**

அட்டவணை 11 (உ) 4, பயிர்களின் அடிப்படையில் வழங்கப்பட்ட கடன்களின் தொகை, இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் உப உணவுப்பயிர்ச் செய்கை தொடர்பாகப் பெறப்பட்ட மீளக் கொடுப்பனவுகள் என்பனவற்றைக் காட்டுகின்றது.

## அட்டவணை II (உ) 4

## புதிய வேளாண்மைக் கொடுகடன் திட்டம்—உப உணவுப் பயிர்க் கடன்கள்

| ஆண்டு | வழங்கப்பட்ட தொகை (நூறு ரூபாய்களில்) | | | | | எல்லாப் பயிர்களையும் பொறுத்த மீளவிருப்பின் நிலைமைகள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | வழங்கப்பட்ட தொகையில் சதவீதம் | | | |
| | மிளகாய் | சின்ன வெங்காயம் | உருளைக் கிழங்கு | காய்கறி வகை | மொத்தம் | மொத்த மீளக் கொடுப்பனவுகள் | பயிர் விளையாமையால் நீடிக்கப்பட்டவைகள் | வரவேண்டியது ஆனால் வரத் தவறியதில்லை | வரத் தவறியவை | மொத்த மீளக் கொடுப்பனவுகள் | பயிர் விளையாமையால் நீடிக்கப்பட்டவைகள் | வரவேண்டியது ஆனால் வரத் தவறியதில்லை | வரத் தவறியவை |
| 1967/68 | 19,602 | 19,843 | 11,444 | 4,138 | 55,027 | 45,533 | — | — | 9,494 | 82.74 | — | — | 17.25 |
| 1968/69 | 20,430 | 24,704 50* | 15,021 | 4,347 | 64,552 | 52,120 | 3,115 | — | 9,317 | 80.74 | 4.82 | — | 14.43 |
| 1969/70 | 23,933 | 29,994 | 18,333 | 3,394 56** | 75,710 | 54,595 | 74 | — | 21,041 | 72.11 | .09 | — | 27.79 |
| 1970/71 | 11,500 | 16,077 | 22,367 | 1,485 73** | 51,502 | 3,6167 | 350 | 74 | 14,911 | 70.22 | .67 | .14 | 28.95 |
| 1971/72 | 7,020 | 14,684 | 24,496 | 2,104 | 48,304 | 21,074 | — | 25,961 | 1,269 | 43.62 | — | 53.74 | 2.62 |
| 1972/73 | 9,126 | 2,921 | 9,290 | 172 80** | 21,589 | 25 | — | 21,564 | — | 11 | — | 99.88 | — |
| மொத்தம் | 91,611 | 108,273 | 100,951 | 15,849 | 316,684 | 209,514 | 3,539 | 47,599 | 56,032 | 66.15 | 11.11 | 15.03 | 17.69 |

* பம்பாய் வெங்காயம்

** நிலக்கடலையும், சோளமும்.

மூலம்: கிராமிய கொடுகடன் திணைக்களம், மக்கள் வங்கி.

1970/71ஆம்ஆண்டில்,மிளகாய்,வெங்காயம்,உருளைக்கிழங்கு பரக்கறி என்பவற்றின்பயிர்ச்செய்கைக்காக வழங்கப்பட்டகடன்களின்மொத்தத் தொகையாகிய ரூ. 51 இலட்சம் 1971/72 ஆம் ஆண்டில் மேலும் குறைக்கப்பட்டு ரூ. 48 இலட்சமாக விளங்கியது. கடன் பாவனையில் காணப்பட்ட அதிகரிப்புத் தன்மை 1969/70 ஆம் ஆண்டில் ரூ. 76 இலட்சமாகக் காணப்பட்டு உச்ச நிலையை அடைந்திருந்தது. இதன்பின்னர் இக்கடன் பாவனையின் தொடர்ச்சியான வீழ்ச்சிக்கு பயிர்ச் செய்கையாளர் இப்பொருட்களிலிருந்து உயர்ந்த வருமானம் பெற்றமை காரணமாக இருக்கலாம் எனக்கருதப்படலாம். எப்படியிருப்பினும் உருளைக்கிழங்குப் பயிர்ச் செய்கைக்கான கடன்கள் தொடர்ந்தும் அதிகரித்தன. 1971/72 ஆம் ஆண்டில் இத்தேவைக்காக வழங்கப்பட்ட கடன் ரூ. 24 இலட்சமாக அமைந்து 1967/68 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தொடர்பான தொகையை விட ரூ. 13இலட்சம் அல்லது 118 சதவீதம் அதிகமானதாக விளங்கியது. மீளக்கொடுக்கப்பட்ட கடன்களின் சதவீதம் ஆண்டுதோறும் வீழ்ச்சியடைந்து வந்தது. 1967/68ஆம் ஆண்டில் 82 74 சதவீதமாகக் காணப்பட்ட எல்லாவித கடன்களினதும் மீளக் கொடுப்பனவு 1970/71 ஆம் ஆண்டில் 70.22 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. 1971/72இல் 43.62 சதவீதமாகக் காணப்பட்ட மீளக் கொடுப்பனவு மட்டம் உண்மை நிலையினைக் காட்டுவதாகக் கொள்ள முடியாது. காரணம் யாதெனில் கடன்களின் 53.74 சதவீதக் கடன்கள் இன்னும் கொடுக்கத் தவறிய கடன்களாக வகைப்படுத்தப்படாமையேயாகும்.

1971/72 ஆம் ஆண்டின் உபஉணவுப் பயிர்களுக்கான கடன்களின் மாவட்டவாரியான பகுப்பாய்வு பின்னிணைப்பு 11இன் அட்டவணை 65இல் கொடுக்கப்பட்டுள்ளது. மிளகாய்ச் செய்கைக்கு வழங்கப்பட்ட கடன்களின் மீளக் கொடுப்பனவைப் பொறுத்தவரை மட்டக்களப்பு மாவட்டத்தின் சதவீதம் 71 ஆக அமைந்து 1971/72 ஆம் ஆண்டின் உயர்ந்த மட்டமாகக் காணப்பட்டது. ஏனைய மாவட்டங்கள் யாவற்றிலும் மீளக் கொடுப்பனவு மட்டம் மிகக் குறைவாகக் காணப்பட்டன. வெங்காயத்துக்கான கடன்களின் மீளக் கொடுப்பனவு நிலைமையும் மிகவும் குறைந்த நிலையிலேயே காணப்பட்டது. ஆகக்கூடிய மீளக் கொடுப்பனவு மட்டமான 45 சதவீதம் மொனராகலை மாவட்டத்திலேயே பதிவு செய்யப்பட்டது எப்படியிருப்பினும் உருளைக்கிழங்குக் கடன்கள் சம்பந்தமான மீளக் கொடுப்பனவு மட்டம் பதுளை, நுவரெலியா மாவட்டங்களில் 92.7 சதவீதமாக அமைந்து குறிப்பிடத்தக்க அளவு உயர்வாகக் காணப்பட்டது.